★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

# நம் நாடு

தி. மு. க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆவணி 24உ சனி (8—9—56) ★ ★ : வெளியூர்: ஆவணி 25உ ஞாயிறு (9—9—56) [இதழ் 77

## இரண்டாம் ஐந்தாண்டு திட்டமும் சூயஸ் கால்வாயும்!

புதுடில்லி, செப். 7—

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் குறித்து பிரதமர் நேரு மாநிலங்கள் சபையில் பேசும்போது குறிப்பிட்டதாவது:—

"இந்தத் திட்டம் ஒன்றும் இறுதியானது அல்ல; ஏதாவது மாற்றங்கள் ஏற்படுமானால்—உதாரணமாக சூயஸ் கால்வாய் பற்றிய தகராறில் ஏதேனும் நிகழுமானால், அவை நமது திட்டத்தை வெகுவாகப் பாதிப்பனவாக இருக்கும்.

எந்தவித விரும்பத்தகாத விளைவும் சூயஸ் கால்வாயைப்

(4-ம் பக்கம் பார்க்க)

# நாசர் உறுதி தளரவில்லை - நிலை குலையவில்லை

## மென்சீஸ் குழு முயற்சி தோல்வி

## சூயஸ் பேச்சு வார்த்தைகள் முறிவு?

கடைசி நிமிடத்தில் நாசர், தம் நிலையை மாற்றிக் கொண்டாலன்றி, சூயஸ் பற்றிய டல்லஸ் திட்டத்தைச் சுமந்துகொண்டு எகிப்துக்கு வந்த மென்சிஸ் குழு தோல்வியுற்றதாகவே கொள்ளவேண்டும் என்று செய்திகள் வந்துள்ளன.

மென்சிஸ் குழுவினர் கடந்த ஒரு வாரகாலமாக எகிப்திய குடியரசுத் தலைவர் நாசருடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் முறிந்துவிட்டன என்ற செய்திபற்றிக் கருத்தறிவிக்குமாறு கேட்கப்பட்டபோது, மென்சிஸ் குழுவில் உள்ள ஒருவர், 'நாங்கள் இங்கு இருக்கிறோம்; இன்னும் முயற்சிப்போம்' என்று மட்டும் மழுப்பியிருக்கிறாரே தவிர, செய்தியை மறுத்ததாகத் தெரியவில்லை.

'இன்னும் ஒரு முறையேனும் கடைசித் தடவையாக நாசரை சந்திக்காமல் கெய்ரோவிலிருந்து புறப்படமாட்டோம்' என்று அந்த அதிகாரி கூறினாராம்!

கடந்த புதனன்றுதான் குழுவினர், நான்காவது தடவையாக நாசரைச் சந்தித்தனர்; அதற்குப் பிறகு இன்றுவரை சந்திக்கவில்லை என்று தெரியவருகிறது.

## தேவையும் திட்டமும்

டி.டி. கிருஷ்ணமாச்சாரி விளக்கம்

திட்டத்திற்காகச் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ள தொகையான ரூ. 4,800 கோடி நமது தேவைக்குப் போதுமானதல்ல என்பதை சர்க்கார் உணர்ந்திருக்கிறது; நமக்கு அதிகம் தேவைப்படலாம்; நமது தேவையையும் நமது திட்டத்தையும் சரிக்கட்டிக்கொள்ளவேண்டியதுதான்," என்று, டி. டி கிருஷ்ணமாச்சாரி மாநிலங்கள் சபையில் கூறியிருக்கிறார்.

## சென்னை நகர சபைக் கூட்டத்தில் மீண்டும் குழப்பமும் கூச்சலும்

## 'கோரம்' இன்றி கூட்டம் ஒத்திவைப்பு

சென்னை, ஆக 7—

கடந்த ஆக. 28-ந் தேதியன்று நகரசபைத் தலைவர் ஒத்திவைத்துவிட்ட சபைக் கூட்டத்தை, துணைத் தலைவரைத் தலைவராக்கி தொடர்ந்து நடத்த காங்கிரஸ் கட்சித் தலைவர் முயன்றபோது எழுந்த குழப்பமும் கூச்சலுமான சம்பவங்கள் இன்றும் தொடர்ந்து நடைபெற்றிருக்கின்றன.

இன்று நகரசபை தலைவர் (மேயர்) இராமநாத அய்யர், சபைக் கூட்டத்திற்குத் தலைமை வகித்திருக்கிறார்.

கூட்டம் துவங்கியதும் எதிர்க்கட்சியினர் எழுந்து, சென்ற கூட்டம் முடிந்தபின் காங்கிரஸ் தலைவர் நடந்துகொண்ட 'அநாகரீகமான' முறை குறித்து தலைவரிடம் புகார் கிளப்பினார்; அதைத் தொடர்ந்து காங்கிரசார் எழுந்து கூச்சல் போட்டிருக்கின்றனர். எதிர்க்கட்சியினரும் காங்கிரசாரும் பலத்த வாய்ச் சண்டையிலீடுபட்டு, சபையில் பெரும் சந்தடியைக் கிளப்பியிருக்கின்றனர்.

தலைவர் இராமநாத ஐயர் குறுக்கிட்டு, கடந்த ஆகஸ்டு 28-ந் தேதியன்று தான் கூட்டத்தை ஒத்திவைத்த பின்னர் நடைபெற்ற சம்பவங்களை இங்கு விவாதிப்பது முறையல்ல என்று எடுத்துரைத்திருக்கிறார்.

தோழர் இராசமன்னார் எழுந்து, 'இதை நான் குறிப்பிடுவதற்குக் காரணம், எவரையும் புகார் கூற வேண்டுமென்பதல்ல' என்றும், சபைத் தலைவரின் கவனத்திற்கு மட்டுமே அந்தச் சம்பவங்களைக் கொண்டு வருவதாகவும் கூறியிருக்கிறார்.

"சபைத் தலைவர் கூறுகிறபடி, இந்தச் சம்பவங்கள் குறித்து நாம் அலட்சியமாக இருந்துவிட முடியாது; வேண்டுமென்றே சபையில் அன்று குழப்பமும் கூச்சலும் கிளப்பப்பட்டன," என்று தோழர் கே. விநாயகம் கூறியிருக்கிறார்.

உடனே ஒரு காங்கிரஸ் உறுப்பினர் எழுந்து, 'கவுன்சில் கூட்டம் முடிவுற்றபின் நடந்தவற்றிற்கு மேயரும் கவுன்சிலும் பொறுப்பாளியாக முடியாது' என்று கூறினாராம்.

பின்னர், காங்கிரஸ் கட்சித் தலைவர் இராதாகிருஷ்ண பிள்ளை எழுந்து, அன்று நடந்தவை பற்றிப் பேச முற்பட்டபோது, எதிர்க்கட்சியினர் எழுந்து சில கேட்க வேண்டுமென்று கோரினராம்.

உடனே குரலை உயர்த்தி, தோழர் இராதாகிருஷ்ண பிள்ளை, 'சபைத் தலைவர் எதிர்க் கட்சியினரைக் கட்டுப்படுத்தவில்லை' என்று கூறினாராம்.

இதற்கு எதிர்க்கட்சியினர் பலத்த கண்டனம் தெரிவித்திருக்கின்றனர்; 'இராதா கிருஷ்ண பிள்ளை கூறிய வாசகங்கள் சபை உபயோகத்திற்குப் புறம்பானவை' என்று கூறியிருக்கின்றனர். தலைவர் ஏதும் கூறவில்லையாம்.

பின்னர், துவக்கத்தில் சபையில் 'கோரம்' இருந்தும், இந்தச் சந்தடியின் பயனாகக் 'கோரம்' இல்லாது போகவே சபைகலைக்கப்பட்டதாம்!

## 'ஜனசக்தி'க்கு விநாயக சதுர்த்தி!

'செப். 8: விநாயக சதுர்த்தி விடுமுறை'

"செப். 8-ந் தேதி விநாயக சதுர்த்தியை முன்னிட்டு அன்று நம் அச்சகத்திற்கு விடுமுறை; ஆகவே, சென்னை 8-9-56 (வெளியூர் 9-9-56) தேதிய 'ஜனசக்தி' இதழ் வெளிவராது; ஆகவே வார மலர், சென்னையில் 9-9-56 (வெளியூரில் 10-9-56)ல் கிடைக்கும்"

என்று, ஜனசக்தி 6—9—56 இதழில் ஒரு அறிவிப்புக் காணக்கிடக்கிறது

# வட நாட்டு ஏகாதிபத்தியவாதிகளுக்கு அடிமேல் அடி!

## 'அபிவிருத்தித் திட்டங்களில் தென்னாடு அலட்சியப்படுத்தப்பட்டுள்ளது'

மாநிலங்கள் சபையில் முஸ்லிம் லீக் தலைவர் முகம்மது இஸ்மாயில் இடித்துரை

புதுடில்லி, செப். 7—

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் குறித்து மாநிலங்கள் சபையில் விவாதம் நடைபெற்றபோது, அபிவிருத்தித் திட்டங்களில் தென்னாட்டிற்கு இழைக்கப்பட்டுள்ள அநீதி குறித்து மீண்டும் 'டில்லிப் பெரிய மனிதர்'களுக்கு எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது.

அகில இந்திய முஸ்லிம் லீக் தலைவரான முகம்மது இஸ்மாயில் அவர்கள், மாநிலங்கள் சபையில் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் பற்றிப் பேசும்போது, 'அபிவிருத்தித் திட்டங்களில் தென்னாடு புறக்கணிக்கப்பட்டிருக்கிறது' என்று இடித்துரைத்திருக்கிறார்.

சென்னையைச் சேர்ந்த மற்றொரு உறுப்பினர் (காங்கிரஸ்) தோழியர் நல்லமுத்து இராமமூர்த்தி, 'திட்டத்தில் கல்வித் துறைக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை போதுமானதல்ல; பெண் கல்விக்குப் பெரும் அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது; இதனால் இயற்கையாகவே பெண்கள் திட்டத்தில் பங்கு கொள்வது அரிதாகிவிடும்' என்று எடுத்துக் காட்டியிருக்கிறார்.

## பக்துனிஸ்தான்

கபார்கான் தரும் புதிய விளக்கம்

லாகூர், செப் 6—

மேற்கு பாகிஸ்தான் உயர்நீதி மன்றத்தில் குற்றவாளியாக நிறுத்தப்பட்டுள்ள எல்லைக் காந்தியான கான் அப்துல் கபார்கான், இன்று வாக்கு மூலம் தந்திருக்கிறார்.

19 பக்கங்களடங்கிய அந்த அறிக்கையில் அவர், தனது பக்துனிஸ்தான் கோரிக்கை பற்றி விளக்கம் தந்திருக்கிறார்.

'பாகிஸ்தானின் ஆதிபத்திய உரிமைகளுக்கு உட்பட்டதாக பக்துனியர்கள் வாழும் பிரதேசங்களடங்கிய ஒரு மாநிலம் வேண்டும்; அதற்கு பக்துனிஸ்தான் என்று பெயரிட வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கையாகும்' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

பாகிஸ்தான் அமைந்ததும் தனது செஞ்சட்டை இயக்கத்தின் மீது பழி சுமத்தப்பட்டது; தான் கைது செய்யப்பட்டு தண்டிக்கப்பட்டது; காலஞ் சென்ற ஜின்னா விடத்தில் தன்னைப் பற்றி பாகிஸ்தான் தலைவர்கள் அவதூறு கிளப்பியது முதலியன எல்லாம் குறித்தும் கபார்கான் தனது அறிக்கையில் குறிப்பிட்டுவிட்டு, 'நான் குற்றவாளி அல்ல' என்று வாதிட்டிருக்கிறார்.

## வரகூர் கோயில் தகராறில் சமரசம்

## அரிசனங்கள் உட்பட எல்லா இந்துக்களும் கோயிலுக்குள் செல்லலாம்

தஞ்சாவூர், செப் 7—

வரகூர் வெங்கடேச பெருமான் கோயிலுக்குள் பிராமணரல்லாதார் நுழையக்கூடாது என்ற தடையை ஒட்டி, பிராமணர்—பிராமணரல்லாதாரிடையே இருந்துவந்த சச்சரவு, இன்று சமரசமாகத் தீர்ந்துவிட்டது; இருசாராரும் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

ஒப்பந்தப்படி, அரிசனங்கள் உள்பட எல்லா இந்துக்களும் கோயிலுக்குள் செல்லலாம் என்றும் கோயில் நிர்வாகம் பரம்பரை டிரஸ்டிகள் வசமே இருக்கும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

இக்கோயில் பிராமணர்களுக்கே சொந்தம் என்றும், பிராமணரல்லாதார் அதில் நுழையக்கூடாது என்றும் கோயில் பிராமண டிரஸ்டிகள், மாவட்ட நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்து நடைபெற்று வந்திருக்கலாம்.

பிராமணரல்லாத இந்துக்கள் கோயிலில் நுழைவதற்காக சத்தியாக்கிரகப் போராட்டம் சென்ற ஒரு வாரமாக நடத்தி வந்தனர்.

## உத்தேசமில்லையாம்!

புதுடில்லி, செப். 7—

சைப்ரசுக்கோ, மற்றெந்தப் பகுதிகளுக்கோ இந்தியத் துருப்புகளை அனுப்பும் உத்தேசம் சர்க்காருக்குக் கிடையாது என்று மக்கள் சபையில் பிரதமர் நேரு தெரிவித்திருக்கிறார்.

## 275 பள்ளிகளில்!

95,405 குழந்தைகள் கல்வி கற்கின்றனராம்

சென்னை, செப். 8—

சென்னை நகராண்மைக் கழகம் நடத்திவரும் 275 பள்ளிகளில் இப்போது 95,405 குழந்தைகள் கல்வி கற்று வருகின்றனர்என்றும், அவர்களில் பகல் உணவு தரப்படும் குழந்தைகளின் எண்ணிக்கை 11,000-த்திலிருந்து 14,000 ஆக உயர்ந்திருக்கிறது என்றும் தெரிய வருகிறது.

## சீனத் தூதுக்குழு இந்தியா வருகை

விவசாய அபிவிருத்தியைப் பார்வையிடும்

புதுடில்லி, செப். 7—

இந்தியாவில் விவசாய அபிவிருத்தியை அறிந்து செல்வதற்காகச் சீனாவிலிருந்து 20 பேரடங்கிய தூதுக் குழு ஒன்று இந்தியா வரவிருப்பதாகத் தெரிகிறது.

அந்தக் குழு இந்தியாவில் 75 நாட்கள் சுற்றுப் பயணம் செய்யுமாம்.

இரண்டு பிரிவுகளாக வரும் இந்தக் குழுவின் முதல் பிரிவினர் செப்டம்பர் 13-ந் தேதியன்று இந்தியா வந்து சேருவாராம்.

## வேலூரில் ஒரு சிமெண்டு தொழிற்சாலை

வேலூர், செப். 5—

வடஆற்காடு மாவட்டத்தில் ஏராளமான சுண்ணும்பு கிடைக்கிறது என்பதால், இங்கு ஒரு சிமெண்டு தொழிற்சாலை துவங்கலாமா என்பது குறித்து சர்க்கார் யோசித்துக் கொண்டிருக்கின்றனர் என்று மந்திரி மாணிக்கவேலர் குறிப்பிட்டிருக்கிறார்.

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

சென்னை 8-9-'56 சனி


# முதலமைச்சரின் பொருந்தாக் கூற்று!

★

சென்ற சில ஆண்டுகளைப் போன்றே இந்த ஆண்டும் சென்னை அரசாங்கம் பொது மக்களிடமிருந்து கடன் கோரியது. இம்முறை கோரியக் கடன் தொகை முன்னர் கோரப்பட்டுள்ளவற்றை விடக் கூடுதலானதாகும். இருந்தாலும் ஒரே நாளில், அப்பெருந் தொகைக் கடனுக்குத் தேவைப்படும் தொகையைவிடக் கூடுதலாகப் பணம் கிடைத்துவிட்டது.

ரூபாய் பன்னிரண்டரை கோடியை, சென்னை அரசாங்கம் கடனாகக் கோரியது. ஆனால், ஒரே நாளில் ரூபாய் பதினாறு கோடிவரை தனக்குக் கிடைத்துவிடவே, மேலும் அக்கடனுக்காகப் பணம் பெறுவதை அரசாங்கம் உடனடியாக நிறுத்திவிட்டது.

ஒரு அரசாங்கம் பொதுமக்களிடம் கடன் கோருவதும், அவ்வாறு கோரப்பட்டக் கடனுக்குப் பணமளிக்கப் பொதுமக்கள் முன்வருவதும் மிகமிகச் சாதாரண சம்பவமாகும். அது, வேறு எந்த நாட்டிலும் நடைபெறாது, இந்த நாட்டில் மட்டுமே, அதிலும் காங்கிரஸ் ஆட்சியில் மட்டுமே நடைபெற்றுள்ள அற்புதமன்று.

ஒரு அரசாங்கம் பொதுமக்களிடம் கடன் கோருவதும் பொதுமக்கள் கடன் தருவதும் வெறும் சாதாரண நடைமுறை என்ற அளவில்தான் கடன் கோரிய அரசாங்கமும் அதை மதித்து நடந்துகொள்ள வேண்டும். அதைவிடுத்து, கிடைத்தக் கடனுக்கு ஏதோ சிறப்பு இருப்பதுபோன்று ஒரு அரசாங்கத்தை நடத்திச் செல்லும் பொறுப்பில் இருப்பவர்கள், அதுபற்றித் தம்மைத் தாமே புகழ்ந்து பாராட்டிக் கொள்ள முன்வருவது எள்ளி நகையாடத்தக்கதாகும். அக்கடன் பெற்ற திருக்கோலத்தை அரசாங்கத்திற்குக் கிடைத்த மகத்தான வெற்றியாகப் பீத்திக்கொள்ள முற்படுவதும், அதை ஒரு தேர்தல் முதலீடாகப் பயன்படுத்த விழைவதும் வடிகட்டின அரசியல் சூதாட்டமாகும்.

கடன் கேட்ட தொகைக்குக் கூடுதலாகக் கிடைத்து விட்டதை ஒரு புகலாகக் கொண்டு, 'இதற்கு மக்கள் காட்டியுள்ள ஆதரவு மகத்தானது; அரசாங்க முயற்சிகளில் அவர்களுக்குள்ள உற்சாகமான ஒத்துழைப்பையே பிரதிபலிக்கிறது. இந்த மாகாணத்தில் மேற்கொள்ளப் பட்டுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கும் முழு அளவில் மக்கள் தங்களுடைய ஒத்துழைப்பை உறுதிகூறியுள்ளதாக இதன் மூலம் நான் கருதுகிறேன்' என முதலமைச்சர் கனம் காமராசர் அகமும் முகமும் மகிழ்ச்சிந்து பாடியுள்ளார். கடன் கொடுத்த மக்களுக்கு முதலமைச்சர் நன்றியும் தெரிவித்துள்ளார்.

இப்பெருந் தொகையைக் கடனாகக் கொடுத்திருப்பவர்கள் யார் யார்? மொத்தக் கடன் கொடுத்திருப்பவர்களில் சாதாரண மக்களுக்கும் நடுத்தர வர்க்கத்தினருக்கும் உரிய பங்கு என்ன? கிடைத்துள்ள கடன் தொகையில், பெரும் செல்வந்தர்கள், ஆலை முதலாளிகள், தொழில் அதிபர்கள், பெரும் வர்த்தகர்கள் தந்துள்ள பணத்தின் விகிதாச்சாரம் என்ன? குறிப்பிட்ட தொகையை மாத வருமானமாகக் கொண்ட மக்கள் எத்தனை சதவிகிதத்தில் இக்கடன் தொகைக்கு உதவியிருக்கின்றனர்? இத்தகு கேள்விகள் நியாயமாக எழுப்பப்பட வேண்டும்; இவைகளுக்கு விடையும் கண்டாக வேண்டும். அப்பொழுதுதான் முதலமைச்சர் பாராட்டில் மறைந்துகிடக்கும் பித்தலாட்டத்தைப் பொதுமக்கள் புரிந்துகொள்வது சாத்தியமாகும்.

கடன் கொடுப்பதில் ஒரு மாவட்டத்தைப் போன்றே மற்றொரு மாவட்டம் நடந்துகொள்ளவில்லை. கடன் கொடுப்பதில் தொழில் துறையில் முன்னேறியுள்ள மாவட்டங்களான கோவை, மதுரை, சென்னை வரிசைக்கிரமமாக முன்னணியில் உள்ளன. அவைகளை அடுத்துத் தஞ்சையும் வட ஆற்காடும் கடன் கொடுத்துள்ளன; மற்ற மாவட்டங்கள் பின்தங்கிக் கிடக்கின்றன.

அரசாங்க அபிவிருத்தி நடவடிக்கைகளிலும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் மக்களுக்குள்ள நம்பிக்கையைப் பிரதிபலிப்பதாக இக்கடன் வசூல் இருக்கிறது என்னும் முதலமைச்சர் கூற்றை ஒப்புக்கொள்ளுவதானால், கடன் கொடுப்பதில் முதலிடத்தில் உள்ள மாவட்டத்தைக் காட்டிலும் இறுதி இடத்தைப் பெற்றுள்ள மாவட்டம், அரசாங்க அபிவிருத்தி ஏற்பாடுகளில் குறைந்த அளவே நம்பிக்கை வைத்திருக்கிறது என்ற முடிவிற்கே ஒருவர் வந்தாக வேண்டும். அந்த நியாயப்படி, கடன் வசூலையும் அரசாங்க அபிவிருத்தி ஏற்பாடுகளையும் இணைத்து மதிப்பிட்டுக் கூறுவதானால், அரசாங்கத்திற்கு குறைவாகக் கடன் கொடுப்பதின் மூலம், அரசாங்க அபிவிருத்தித் திட்டங்களிலும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் தங்களுக்குள்ள அதிருப்தியை அதிகப்படியான மாவட்டங்கள் வெளிப்படையாகக் காட்டிக் கொண்டுள்ளன என்ற முடிவிற்குத்தான் நியாய புத்தி கொண்ட எவரும் வந்தாக வேண்டும்.

அரசாங்க அபிவிருத்தித் திட்டங்களிலும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒத்த நம்பிக்கை இருக்குமானால், அரசாங்கத்தின் இக்கடன் கோரிக்கையை நிறைவேற்றுவதிலும் ஒன்றை ஒன்று மிஞ்சிவிடாது சமத்துவமான முறையில் மாவட்டங்கள் நடந்துகொண்டிருக்க வேண்டும்—நடந்துகொண்டும் இருக்கும். ஆனால் அத்தகு ஒத்தபோக்கில் நடந்து கொள்ளாது, ஒரு மாவட்டத்திற்கு மற்றொரு மாவட்டம் ஏற்றத் தாழ்வாகக் கடன் தொகை அளித்திருக்கிறது. இந்த ஏற்றத் தாழ்வு முதலமைச்சரின் கணிப்புப்படி, அரசாங்க அபிவிருத்தித் திட்டங்களில் சில மாவட்டங்களுக்குள்ள அதிருப்தியையும், இரண்டொரு மாவட்டங்களுக்குள்ள திருப்தியையும் காட்டுவனவாக உள்ளன என்றே நாம் முடிவு கட்டுகிறோம்.

இந்தப் பெருந்தொகை எப்படி வசூலிக்கப்பட்டது? இதைத்திரட்ட அரசாங்க வரித் துறையில் உள்ள பெரும் அதிகாரிகளும் பாதுகாப்புத் துறை உயர்தர அதிகாரிகளும் கூட்டாக எடுத்துக் கொண்ட கெடுபிடி முயற்சி எத்தகையது? என்பவை எல்லாம் ஆராய்ந்து அறியப்பட்டால்தான், இக்கடன் தொகை வசூலில் மறைந்து கிடக்கும் இரகசியத்தைச் சாதாரண மக்களால் புரிந்துகொள்ள முடியும்.

கோவை, மதுரை, சென்னை, திருநெல்வேலி, தஞ்சை, வட ஆற்காடு என்ற வரிசையில், இக்கடனுக்குப் பணம் திரட்டப்பட்டிருக்கிறது என்ற உண்மை ஒன்றே போதும், இக்கடன் தொகையை எவர் பெரிதும் நிரப்பியிருக்கிறார்கள் என்பதைத் தெளிவாகத் தெரிந்துகொள்ளுவதற்கு. ஆலை அரசர்களும் தொழிலதிபர்களும், வியாபாரச் சீமான்களும் பெரும் நிலப்பிரபுக்களும் அள்ளிக் கொடுத்திருக்கிறார்கள், சென்னை அரசாங்கம் எழுப்பிய இக்கடனுக்கு. இதைத்தான் பொதுமக்கள் கொடுத்த கடன் எனப் பூரிப்புடன் பீத்திக் கொள்ளுகிறார் முதலமைச்சர்!

ஆலை அரசுகளும் நிலப்பிரபுக்களும் பொதுமக்களில் ஒன்றிரண்டு சதவிகிதத்தினரேயாவர். மற்றத் தொண்ணூற்றெண்பது சதவிகிதத்தினராக உள்ளனர் பொதுமக்கள். அந்தப் பெரும்பான்மையான ஏழை மக்களுக்கும், அரசாங்கம் எழுப்பிய இக்கடன் தொகைக்கும் கடுகளவுத் தொடர்பும் அறவே கிடையாது. இவ்வாறு ஒரு கடன் கோரிக்கையை அரசாங்கம் வெளியிட்டிருக்கிறது என்றத் தகவலைக்கூட அந்தப் பெரும்பாலான மக்கள் கேட்டறியார்.

உண்மை இவ்வாறு இருக்கும் நிலையில்தான், அரசாங்க அபிவிருத்தித் திட்டங்களிலும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் பொதுமக்களுக்குள்ள உற்சாகமான நம்பிக்கையைப் பிரதிபலிப்பதாக இக்கடன் வசூல் இருக்கிறது என மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடி போட்டுப் பேச முதலமைச்சர் முனைந்திருக்கிறார்.

இக்கடன் வசூல் மற்றொரு உண்மையையும் உள்ளடக்கிக் கொண்டிருக்கிறது. அதாவது, காங்கிரஸ் அரசாங்கம், ஆலை அரசுகள்—நிலப் பிரபுக்கள்—செல்வச் சீமான்கள் அரவணைப்பில்தான் நிலைத்திருக்கிறது என்ற மகத்தான உண்மையையும் இக்கடன்வசூல் உறுதிசெய்கிறது. இதை மறுத்துக் கூற முதலமைச்சருக்கு வக்கும் இல்லை—வகையும் இல்லை.

# கைத்தறி துணி உற்பத்தி அதிகரிப்பு

## சர்க்கார் புள்ளி விபரம் தருகிறது

புதுடில்லி, செப். 6—

நடப்பு ஆண்டின் முதல் 6 மாத காலத்தில், நாடு முழுமையிலும் 80 கோடி 20 இலட்சம் கெசம் கைத்தறித் துணி நெய்யப்பட்டிருக்கிறது என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டில், வருடம் முழுவதுமே மொத்தமாக 148 கோடி கெசம் கைத்தறித் துணிதான் உற்பத்தி செய்யப்பட்டது.

'பிரேம் தறி'கள் வாங்கிக் கொள்ள நெசவாளர்களுக்குக் கணிசமான மானியத் தொகை தருவதெனவும், வீடுகளில் 'பிரேம் தறி'கள் அமைத்துக் கொள்வதற்கேற்ப நெசவாளர்களின் வீடுகளை விரிவுபடுத்த நிதி உதவி செய்வதெனவும், இந்த வகையில் ஆகும் மொத்தச் செலவில் மூன்றில் ஒரு பங்கு மானியத்தொகையாகவும், மற்றிரு பங்குத் தொகை கடனாகவும் வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் 'பிரேம் தறி'கள் உற்பத்தி அதிகரிப்பிற்கு நல்ல சாதனங்கள் என்று கூறப்படுகிறது.

சென்ற 1953-ல் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து மத்திய சர்க்கார், இவ்வாண்டு மார்ச் திங்கள் இறுதிவரை ரூ 10·9 கோடி, மாநில சர்க்கார்களுக்கு வழங்கியிருப்பதாகவும், அத்தொகையில் ரூ. 9·65 கோடி வரை மாநில சர்க்கார்கள் செலவிட்டிருக்கின்றனவென்றும், இத்தொகையில் பெரும்பகுதி, நெசவாளர் கூட்டுறவுகளை நிறுவுவதற்கென ஒதுக்கப்பட்ட முதலீடுகளாகும் எனவும் அண்மையில் பம்பாயில் நடைபெற்ற அகில இந்தியக் கைத்தறிக் குழு கூடி கைத்தறி முன்னேற்றம் குறித்துப் பரிசீலனை செய்தபோது தெரியவந்திருக்கிறது.

திட்டம் கொண்டுவரப்பட்ட 1953ம் ஆண்டில் கைத்தறிக் கூட்டுறவுகளில் 6,28,000 நெசவாளர்கள் சேர்ந்தனராம். இந்த ஆண்டில்—இப்போது--10,27,000 பேர் மொத்தமாகச் சேர்ந்திருக்கின்றனராம். இன்னும் அதிகமான அளவில் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் சேர்க்க வேண்டுமெனவும் திட்டமிடப்பட்டிருக்கிறதாம்!

# அடுத்த தலைமுறைகளில் இந்தியா மகத்தான மாறுதல்களை அடைந்துவிடுமாம்!

## ஆதாரக் கல்வி மதிப்பீட்டுக் குழு அறிக்கை

புதுடில்லி, செப். 6—

“ஆதாரக் கல்விப் பயிற்சி பெற்றுவரும் மாணவர்கள் அடுத்த சில தலைமுறைகளுக்குள்ளாகவே இந்தியாவை 'மகத்தான' முறையில் மாற்றி அமைத்து விடுவார்கள். இத்தனை பெரிய மாறுதல்களை வேறு எந்த முறைகளின்மூலமும் செய்ய முடியாது”

—என்று, ஆதாரக் கல்வி மதிப்பீட்டுக் குழு சர்க்காரிடம் தந்த அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறதாம்.

ஆதாரக் கல்வியைப் பரப்புவதில்கூடச் சென்னை மாநிலமும் பம்பாய் மாநிலமும்தான் முன்னணியில் இருந்துவருகிறது என்றும் உத்திரப் பிரதேசம், மேற்கு வங்காளம் ஆகிய இரு மாநிலங்களும் கடைசி இடத்தில் இருந்துவருகின்றன என்றும் அந்த அறிக்கையின் மற்றொரு பகுதிமூலம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

“வருங்கால இந்தியா தொழில்மயமான ஒரு நாடாக இருந்தாலும்சரி, அல்லது பழங்காலத்தைப்போன்று கிராமிய நாகரீக நாடாக மாறினாலும்சரி, ஏட்டுக் கல்வி படித்த 'புத்தகப் புழுக்களை'விட ஆதாரக் கல்வி கற்றவர்கள் அதிகப் பொருத்தமுடையவர்களாகத் திகழ்வார்கள்” என்றும் அக்குழு தனது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது.

# 'ரிக்ஷாக்களை படிப்படியாக ஒழிக்க வேண்டும்'

## டில்லி சர்க்கார் நகல் விதிகள்

புதுடில்லி, செப் 6—

ரிக்ஷாக்களை படிப்படியாக ஒழிக்க வேண்டுமென டில்லி சர்க்கார் கருதுகிறதாம்.

ரிக்ஷா இழுப்போர்களின் வேலை நிலைகளைக் கண்காணிப்பதற்கான சில நகல் விதிகளைத் தயாரித்து டில்லி சர்க்கார் மாநில சர்க்கார்களுக்கு அனுப்பித் தந்திருக்கின்றனராம்.

இனி மாநில சர்க்கார்கள், தங்கள் தங்கள் மாநிலங்களில் உள்ள நிலைகளுக்கேற்ப விதிகளைத் திருத்திக்கொண்டு அவற்றை அமுல் செய்ய வேண்டும் என்பது ஏற்பாடாம்.

நகல் விதிகளின்படி, ரிக்ஷா இழுப்போர் 30 வயதுக்குக் குறைந்தவர்களாயிருக்கக் கூடாது என்றும், அனுமதி ஓராண்டு காலத்திற்கு மட்டுமே தற்காலிகமாகத் தரப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டிருக்கிறதாம்.

# டில்லி சர்க்காரை ஏமாற்றிய போலி கல்விப் பயிற்சி நிலையங்கள்

## மக்கள் சபையில் அமிர்தகௌரி தகவல்

புதுடில்லி, செப். 6—

டில்லி மாநில சர்க்கார், தனது சுகாதார அதிகாரிகள் சிலருக்கு பயிற்சி தரவேண்டுமென விரும்பி ஒரு பயிற்சி நிலையத்திற்கு அனுப்பினராம்; ஆனால், அந்தப் பயிற்சி நிலையம் ஒரு போலீஸ் பயிற்சி நிலையம் எனபது பின்னர் தெரியவந்ததாம்.

இந்தத் தகவலை மக்கள் சபையில், சுகாதார மந்திரி ராஜகுமாரி அமிர்தகௌரி தெரிவித்திருக்கிறார்.

இந்தச் சம்பவம் 1955-ல் நடைபெற்றதாம். தொடர்ந்து விசாரணை நடத்தியதில், 'சுகாதார அதிகாரிகள் பயிற்சிக்கு சிறந்த இடம்' என்று கூறப்படும் பயிற்சி நிலையம் ஒன்றும் 'போலி' என்பது கண்டுபிடிக்கப்பட்டதாகவும் மந்திரி கூறியுள்ளார்.

# மாநிலப் புது அமைப்பு

## சென்னையில் விசேட அதிகாரி நியமனம்

சென்னை, செப். 6—

மாநிலப் புனரமைப்பின் விளைவாகத் திருவாங்கூர் கொச்சி மாநிலத்திலிருந்துவரும் சில பகுதிகள் சென்னை மாநிலத்துக்கு மாற்றப்படுவதால் ஏற்படக்கூடிய பல்வேறு வகைப்பட்டப் பிரச்சினைகளையும் குறித்து ஆராய இத்திங்கள் 15-ந் தேதியன்று ஒரு புதிய விசேட அதிகாரி பதவி உருவாக்கப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மாவட்டக் கலெக்டர் அந்தஸ்துள்ள இப்பதவி வகிக்கும் அதிகாரியின் தலைமை அலுவலகம் நாகர்கோவிலில் அமையப் பெறும் என்றும், அவர், திரு—கொச்சி மாநில சர்க்காரின்கீழ் பணியாற்றுவார் என்றும் தெரிய வருகிறது.

# இரண சிகிச்சையில் ஒரு புதுமை!

சிக்காகோ—

மயக்கித் தூங்க வைக்கப்பட்ட (குளோரோபாரம்கொடுக்கப்பட்ட) நோயாளி ஒருவருக்கு நடத்தப்பட்ட முதலாவது நுரை ஈரல் இரண சிகிச்சை வெற்றியளித்திருப்பதாகச் செய்தி ஒன்று தரப்பட்டிருக்கிறது.

லாஸ் ஏஞ்சல்ஸிலுள்ள 'சீடர்ஸ் ஆப் லெபனன்' மருத்துவ மனையில் ஈரலில் கட்டி ஏற்பட்ட நோயாளியான 25 வயதுடைய பெண் ஒருவரை மயக்கித் தூங்க வைத்து, $2\frac{1}{2}$ மணி நேரம் இரண சிகிச்சை செய்யப்பட்டதாம். ஒரு வாரத்திற்குப் பிறகு அவர் நல்ல நிலை'யில் அந்த மருத்துவ மனையை விட்டு வெளியேறினாராம்!

மயக்கித் தூங்க வைக்கப்பட்ட ஆட்களில், இதுவரையிலும், வயிற்றில் இரண சிகிச்சை, சிறுகுடல் நோய் அகற்றல், மார்பு இரண சிகிச்சை, உடலுறுப்பை வெட்டி எடுத்தல் ஆகிய சிகிச்சைகள் மட்டுமே செய்யப்பட்டு வந்தன.

# கைத்தறி பதிவு

## ஆரம்பமாகி விட்டதாம்

சென்னை, செப். 6—

சென்னை மாநிலத்தில் கைத்தறிகளைப் பதிவு செய்யும் வேலை ஆரம்பமாகிவிட்டது என்றும், இவ்வேலை, வருகிற நவம்பர் திங்கள் இறுதிக்குள் முடிவடைந்து விடலாம் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் கூறப்பட்டிருக்கிறது.

இந்த வேலைக்கென விசேட சிப்பந்திகளும் நியமிக்கப்பட்டிருக்கின்றனராம்.

இந்திய சர்க்கார் விடுத்துள்ள ஒரு மனு நமூனாவின் அடிப்படையில் தறிகள் அனைத்தும் பதிவு செய்யப்படுகின்றன என்றும், கூட்டுறவுச் சங்கங்கள், தனிப்பட்டவர்கள் ஆகிய இரு துறைகளிலுமுள்ள தறிகள் பதிவு செய்யப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநிலத்தில் றூல் ரேஷன் இருந்த காலத்தில் 5,60,000 தறிகள் இருந்ததாகக் கணக்கிடப்பட்டதாம்.

# 'நம் நாடு' வளர்ச்சி நிதி

★

விருகாவூர் மணமக்கள் தோழர் ம. பாண்டுரங்கன்-தோழியர் சின்னு ஆகியோரின் திருமணத்தின நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடை அளிக்கப்பட்டது.

ஃ ஃ ஃ

காஞ்சிராபாளையம் வேணுகோபாலின் குழந்தைக்குப் பெயர் சூட்டியதன் நினைவாக, ரூ. 1. 'நம் நாடு' வளர்ச்சிக்கு நன்கொடை அளிக்கப்பட்டது. நன்கொடைத் தொகைகள் வரப்பெற்றோம் — நன்றி — பொறுப்பாளர்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★-★★★★★★★★★★★★★★★★★★

தலைமை நிலையச் செய்தி:

# சென்னைத் தோழர்கள் கவனிக்க!

சென்னை நகரின் பல வட்டங்களிலும் உள்ள கழகத் தோழர்கள், இதுவரை தங்களை வாக்காளர்களாகப் பதிவு செய்து கொள்ளாமலிருந்தால் உடனடியாக இந்த செப்டம்பர் மாதம் 21-ந் தேதிக்குள்ளாகக் கீழ்க்கண்டுள்ள இடங்களில் சென்று விவரம் அறிந்து, தங்களை வாக்காளர்களாகப் பதிவு செய்து கொள்ளவேண்டுகிறோம்.

கழகத் தோழர்கள் தங்களைப் பதிவு செய்துகொள்வதுடன் நின்றுவிடாது, தங்கள் வட்டத்தில் உள்ள மக்களில் இதுவரை வாக்காளர் ஆகாதவர்களை உடனே வாக்காளராகப் பதிவு செய்துகொள்ளுமாறு ஆவன செய்ய வேண்டுகிறோம்.

★

## விவரங்கள்:

சென்னை நகரில் எல்லாத் தொகுதிகளுக்கும் வாக்காளர் பட்டியலில், திருத்தங்கள் அடங்கிய மொத்தமான பூர்வாங்கப் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு விட்டன. வாக்காளர் பட்டியலின் பிரதியும், திருத்தப்பட்டியலும் சென்னை நகர் மன்றக் (ரிப்பன்) கட்டிடத்தில், பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்படும்.

இவற்றின் பிரதிகளை நகரிலுள்ள போலீஸ் நிலையங்கள், பதிவு (ரிஜிஸ்டர்) காரியாலங்களிலும், கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு இடங்களிலும், அலுவலக நேரங்களில் பொதுமக்கள் சென்று பார்வையிடலாம்.

பட்டியலில் புதிதாகப் பெயர்களைச் சேர்ப்பதற்கான கோரிக்கைகளும், எந்த ஒரு பெயர் சேர்க்கப்பட்டிருப்பதை ஆட்சேபிக்கும் கடிதங்களும், திருத்த அதிகாரிக்கு (நகரசபை கமிஷனருக்கு), அதற்கான குறிப்பிட்ட 'பாரத்'தில் பூர்த்திசெய்து, 1956 செப்டம்பர் 21-ந் தேதிக்கு முன் சமர்ப்பிக்க வேண்டும்; இவற்றை அவரிடமோ, அல்லது வாக்காளர் பட்டியல் அதிகாரி (நகர சபை ரெவினியூ அதிகாரி) யிடமோ நேரில் கொடுக்கலாம்; அல்லது, பதிவுத் தபால்மூலம் திருத்த அதிகாரிக்கு அனுப்பலாம்.

## 'டிவிஷன்'—எண்—பெயர்கள்;

வாக்காளர் பட்டியல் பிரசுரிக்கப்படும் இடங்கள்
(கார்ப்பொரேஷன் டிவிஷனல் ஆபீஸ்)

1. புதுவண்ணாரப்பேட்டை — 16, கும்மாளம்மன் கோயில் தெரு.
2. இராயபுரம் — 14, உசேன்மேஸ்திரி தெரு.
3. சிங்காரத் தோட்டம் — 103, மன்னார்சாமி கோயில் தெரு.
4. சஞ்சீவிராயன்பேட்டை — 15, சிமிட்டெரி ரோடு.
5. கொருக்குப்பேட்டை — 462, திருவொற்றியூர் பெரிய சாலை.
6. வியாசர்பாடி — 46, மாதவரம் பெரியசாலை, பெரம்பூர்.
7. பேசின்பிரிட்ஜ் — சானிடரி இன்ஸ்பெக்டர் ஆபீஸ்.
8. பெத்துநாய்க்கன்பேட்டை — 93, அம்மன்கோயில் தெரு.
9. ஏழுகிணறு — 31/3 செயின்ட் சேவியர் தெரு (மாடி).
10. அம்மன்கோயில் — 13, பிடாரியார்கோயில் தெரு.
11. முத்தியாலுப்பேட்டை: சிடி யூத் லீக் கிளப், ஜெங்கட அய்யர் தெரு.
12. ஆர்பர்: 39, ஜெகாங்கீர் தெரு.
13. கச்சாலீஸ்வரர்: நகரசபை ஆண்கள் பாடசாலை 20, செம்புதாஸ் தெரு.
14. கொத்தவால்சாவடி: 3, கந்தப்பசெட்டித் தெரு.
15. சௌகார்பேட்டை: 25, தாதா முத்தியப்பன் தெரு.
16. ட்ரேவெலியன் பேசின்: நகரசபை மருந்துச்சாலை, பேசின் வாடர் ஒர்க்ஸ் தெரு.
17. சூளை: 29, ஸ்மித் பீல்ட் மார்க்கெட் (கானாத்தியப்ப முதலி தெருவுக்கு எதிரில்).
18. புளியந்தோப்பு — ட்ரெயினேஜ் ஸ்டோர்ஸ், பேசின் பிரிட்ஜ் ரோடு.
19. பெரம்பூர் பாரக்ஸ் — ஹைதரி கார்டன், 24-பி. குக்ஸ் ரோடு.
20. செம்பியம் — ரோடு அண்டு பில்டிங் ஓவர்சியர் ஆபீஸ், 20/23, பேப்பர் மில்ஸ் ரோடு.
21. அயனாவரம் — 1/1-எ, கொன்னூர் பெருஞ்சாலை.
22. கீழ்ப்பாக்கம் — 12 பி, ஆர்ம்ஸ் ரோடு.
23. புரசைவாக்கம் — 30, மேனார்டு தெரு.
24. கோசப்பேட்டை — 22, வடமலை பிள்ளை தெரு.
25. வேப்பேரி — 55, வெள்ளாள தெரு
26. பெரியமேட் — நகர சபை முகம்மதிய ஆண்கள் பாடசாலை, 1-எ, சேவல் ஆஸ்பிடல் ரோடு.
27. எடப்பாளையம் — நகர சபை பெண்கள் பாடசாலை.
28. பார்க் டவுன் — சானிடரி இன்ஸ்பெக்டர் ஆபீஸ், கொளந்தை தெரு.
29. நேப்பியர் பார்க் — நகர சபை ட்ரெயினேஜ் ஸ்டோர்ஸ்.
30. சிந்தாதிரிப்பேட்டை — நகர சபை ஆண்கள் பாடசாலை, 43/1, அருணாசல நாயக்கன் தெரு.
31. கோமளீசுவரன்பேட்டை — 92, ஆரிஸ் ரோட்
32. எழும்பூர் — ஓவர்சியர் ஆபீஸ், வீராசாமி பிள்ளை தெரு.
33. ஆயிரம் விளக்கு — 50, மவுண்ட் ரோடு, கத்தீட்ரல் போஸ்ட்.
34. நுங்கம்பாக்கம் — 11, நூர் வீராசாமி ஐயர் தெரு.
35. கோடம்பாக்கம் — 17. சூளைமேடு ரோடு.
36. தியாகராயநகர் (தெற்கு) — 17. கோவிந்தன் தெரு.
37. இராயப்பேட்டை — 48. எடைத்தெரு.
38. புதுப்பாக்கம் — 387. பைகிராப்ட்ஸ் ரோடு
39. திருவட்டீசுவரன்பேட்டை — நகரசபை மருந்துச்சாலை, தய்யார் சாகிப் தெரு.
40. சேப்பாக்கம் — 18/19. சி. என். கிருஷ்ண சாமி ரோடு.
41. திருவல்லிக்கேணி — நகரசபை மருந்துச்சாலை, 25. பைகிராப்ட்ஸ் ரோடு.
42. ஜாம் பஜார் — 14. பள்ளப்பன் தெரு, திருவல்லிக்கேணி.
43. மீர்சாகிப்பேட்டை — 99, வெங்கடாசல முதலி தெரு.
44. மைலாப்பூர் (வடக்கு) — 96, இராயப்பேட்டை பெருஞ்சாலை.
45. மைலாப்பூர் (தெற்கு) — ஓவர்சியர் ஆபீஸ், கச்சேரி ரோடு.
46. தேனாம்பேட்டை — நகரசபை ஷெட், பீமண்ண முதலி தெரு, ஆள்வார்பேட்டை.
47. தியாகராயநகர் (வடக்கு) — நகரசபை மருந்துச்சாலை, சிவஞானம் ரோடு.
48. சைதாப்பேட்டை — நகரசபை மருந்துச்சாலை, 33, சடையப்ப முதலி தெரு.
49. கிண்டி — 65/1, மவுண்ட் ரோடு.
50. அடையார் — பழைய பெட்ரோல் பங்க், பிராடீஸ் ரோடு.

★

சென்னை நகரிலுள்ள தி. மு. கழகக் கிளைகளின் நிர்வாகிகள், இதுகுறித்துத் தீவிர கவனம் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

—தி. மு. க. தலைமை நிலையம்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

# தசாம்ச நாணய முறை

## சென்னை சர்க்கார் நடவடிக்கை

சென்னை, செப். 5—

தற்போது இருந்துவருகிற நாணய முறைக்குப் பதிலாகத் தசாம்ச நாணய முறையை ஏற்படுத்துவதற்காக, இந்திய நாணயச் சட்டத்தின் பிரிவுகளையொட்டிய சென்னை மாநிலச் சட்டங்கள் இருக்குமாறு செய்ய அவற்றைத் திருத்த சென்னை சர்க்கார், மசோதா என்று பிரசுரித்திருக்கின்றனராம்.

தசாம்ச நாணய முறையை அமுலாக்க இந்தியப் பாராளுமன்றம் சட்டமியற்றிவிட்டதால், அதற்கேற்ப மாநிலங்களிலும் நாணய சட்டத்தில் மாறுதல்கள் இருக்க வேண்டுமென்பதற்காகவே இந்த மசோதா வெளியிடப்பட்டிருப்பதாக அதன் நோக்கம் குறித்துக் கூறப்படுகிறது.

# சென்னை மாணவர் மன்றம்

## வெள்ளி விழாப் போட்டிகள்

கதை, கட்டுரை, கையெழுத்து, ஓவியம் முதலியன; ஆரம்பப்பள்ளி உயர்நிலைப்பள்ளி, கல்லூரி மாணவர்கள் அனைவரும் இதில் கலந்து கொள்ளலாம். விவரம் வேண்டுவோர் 'மயிலை சிவ. முத்து, 17, இரத்தினமுதலிதெரு, சென்னை-1' என்ற முகவரிக்கு எழுதவும்.

# திருவண்ணாமலை தி.மு.க.-மாணவர் கிளை

28—8—56-ல், திருவண்ணாமலை வன்னியர் வீதி, எண் 4 இல்லத்தில் தி.மு.க.-மாணவர் கிளையின் செயலாளர் தேர்தல் நடைபெற்றது.

செயலாளராக பீ. சிவப்பிரகாசமும், துணைச் செயலாளராக இரா. நடராசனும், பொருளாளராக தா. நடராசனும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

# தேர்தல் நிதி

★

| | |
|---|---|
| திருவண்ணாமலை தி. மு. கழக.—மாணவர் கிளை | 1—9—3 |
| உலகுடையான்பட்டு தி மு கழகம் | 1—0—0 |
| சின்னசேலம் தி. மு. கழகம் | 5—0—0 |
| இலுப்பூர் தி. மு. கழகப் பொதுக் கூட்டத்தின் மூலம் | 3—3—3 |
| புதூர் உத்தமனூர் தோழர் பு.க. கந்தசாமி | 1—9—3 |
| | ரூ. 12—5—9 |

# திருமணங்கள்

19—8—56 காலை தோழர் கோ. செங்குட்டுவன் அவர்கள் தலைமையில், சென்னை 14-வது வட்ட தி. மு. கழகத் தோழர் சாமிக்கண்ணு—தோழியர் மங்கையம்மாள் திருமணம் நடைபெற்றது. மணமக்களை வாழ்த்தித் தோழர்கள் தி ம. பாலகிருட்டிணன், க. அ. இரகுநாதன், ந. செயராமன், முருகேசன் ஆகியோர் பேசினர். இத்திருமண நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 2 கொடுக்கப்பட்டது.

* * *

2—9—56 காலை $7\frac{1}{2}$ மணிக்கு, தோழர் கா. அப்பாதுரை தலைமையில், தோழர் வீ. சந்திரசேகர்—தோழியர் அ. சரோசா திருமணம், சென்னை நுங்கம்பாக்கம் ஜோசியர் தெரு, எண். 7 இல்லத்தில் நடைபெற்றது. தோழியர் அலமேலு அப்பாதுரை, தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இத்திருமண நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ 2 நன்கொடை தரப்பட்டது

* * *

7—9—56 காலை 8 மணிக்கு, தோழர் திருநாவுக்கரசு, தோழியர் சுலோசனா திருமணம் தோழர் கா. அப்பாதுரை தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் டி. வி. நாராயணசாமி, ம. செ. பரதன், தென்னவன், சீதாராமன் தோழியர் அலமேலு அப்பாதுரை ஆகியோர் மணமக்களைப் பாராட்டிப் பேசினர்.

தோழர் சீத்தாராமன் அவர்களின் ஆண்மகவுக்குக் 'குயிலன்' என, தோழர் அப்பாதுரை பெயர் சூட்டினார். இவற்றின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2. நன்கொடை தரப்பட்டது.

ஃ ஃ ஃ

26—8—56ல், தஞ்சை மாவட்டம் பெரிய குத்தகைத் தோழர் ஆர். இராமகிருட்டிணன்—தோழியர் சாவித்திரி திருமணம் தோழர் என். எஸ். இளங்கோ தலைமையில் நடைபெற்றது. இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடை தரப்பட்டது.

ஃ ஃ ஃ

அத்திக்குடி மேலசண்முகபுரம் தோழர் ப. தெய்வப்பழம்—தோழியர் காசியம்மை திருமணம் 26—8—56ல் தோழர் அ. தங்கராஜ் தலைமையில் நடைபெற்றது. இது நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ.1 நன்கொடை தரப்பட்டது

ஃ ஃ ஃ

26—8—56ல், பொள்ளாச்சி தி. மு. கழகத் தோழர் சங்கரன்—தோழியர் சின்னம்மாள் திருமணம் கிளைக் கழகப் பணிமனையில் நடைபெற்றது. இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது.

[நன்கொடையாகத் தரப்பட்ட தொகைகள் யாவும் வரப்பெற்றோம் - நன்றி—பொறுப்பாளர்]

# 74,360 ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கட்கு சம்பள உயர்வு

**பாதிச் செலவை டில்லி ஏற்கும் எனத் தகவல்**

கராச்சி, செப். 5—

மேற்கு வங்கம் முழுவதிலும் உள்ள ஆரம்ப ஆசிரியர்கள் 74,360 பேர்களுக்கு ரூ. 5 சம்பள உயர்வு தருவது என்று சர்க்கார் முடிவு செய்திருக்கிறதாம்.

வாழ்க்கைச் செலவு அதிகரித்திருப்பதினாலேயே இந்தச் சம்பள உயர்வு தரப்பட்டிருக்கிறதாம்.

இன்னும் ஐந்து ஆண்டுகளுக்கு இப்படிச் சம்பள உயர்வு தரப்படுமானால், ரூ. 3,10,00,000 செலவாகும் என்றும், இதில் பாதியை டில்லி சர்க்கார் ஏற்கும் என்றும் தெரியவருகிறது.

# கோபாலன் மீதிருந்த வழக்கு தள்ளுபடி

**குற்றம் ருசுப்பிக்கப்படவில்லை**

அகமதாபாத், செப். 6—

தோழர் ஏ. கே. கோபாலன், கடந்த ஆகஸ்டு 17-ந் தேதியன்று, தடை உத்தரவை மீறியதாக கைது செய்யப்பட்டு அவர் மீது தொடரப்பட்ட வழக்கை அகமதாபாத் நீதிபதி தள்ளுபடி செய்தார்.

தோழர் கோபாலன் மீது சாட்டப்பட்ட குற்றம் ருசுப்பிக்கப்படவில்லை என்று நீதிபதி தமது தீர்ப்பில் கூறியிருக்கிறார்.

சர்க்கார் ஒரு முடிவை எடுத்துவிட்டதினாலேயே வேறொரு கருத்தை வலியுறுத்தக் கூடாதென்றோ, அந்தக் கருத்துக்கு ஆதரவாக மக்களைத் திரட்டக் கூடாதென்றோ கூறமுடியாது. யோக்கியமான எதிர்க்கட்சி இருப்பதுதான் சனநாயகத்தின் தெளிந்த நடைமுறையாகும். எதிர்க்கட்சி இல்லாவிட்டால் சனநாயகம் நீடிக்கமுடியாது; எனவே தோழர் கோபாலன் மக்களை பலாத்காரத்தில் ஈடுபடுமாறு தூண்டியிருந்தால் ஒழிய, 'மகாகுசராத்தைத் தனிராசியமாகத் தொடர்ந்து இராச்சியில் ஈடுபடுங்கள்' என்று கூறியதை குற்றம் எனக் கொள்ள முடியாது எனவும் அவர் கூறியிருக்கிறார்.

# ஈ. வெ. கி. சம்பத்

**குன்றத்தூர் வருகை**

★

11-9-56 மாலை 6 மணியளவில், கழக மேடையில், செங்கற்பட்டு மாவட்டச் செயலாளர் டி. என். சம்பந்தம் அவர்கள் தலைமையில் தி. மு. கழகச் சார்பில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும்.

தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், டி. நாகப்பன் ஆகியோர் பேசுவர்.

## சென்னை—அமைந்தகரையில் ஈ. வெ. கி. சம்பத்

★

10-9-56 மாலை 6 மணிக்கு, சென்னை — அமைந்தகரை அறிவு இயக்க மன்ற முதலாண்டு விழா, வெள்ளாளத் தெருவில் (இலக்குமி தியேட்டர் எதிரில்), தோழர் செ. கதிரவன் தலைமையில் நடைபெறும்.

தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் சொற்பொழிவாற்றுவார்.

# எம். ஜி. ஆர். நாடகக் குழு நடிகர்மீது வழக்கு

**காரைக்குடி நீதிபதி தள்ளுபடி செய்து தீர்ப்பு**

காரைக்குடி, செப் 4—

காரைக்குடி மகர்நோம்பு பொட்டலில் 12—7—56-ல், எம். ஜி. இராமச்சந்திரன் நாடக மன்றத்தாரால், 'அட்வகேட் அமரன்' என்ற நாடகம் நடைபெற்றபோது உண்டான குழப்பத்தில் காயம் அடைந்தவர்களில் ஒருவரான காரைக்குடியை அடுத்த இலுப்பக்குடியைச் சேர்ந்த மலையாண்டி என்பவர், மேற்படி நாடக மன்றத்தின் நடிகரான தோழர் குண்டுமணி என்ற நடிகர்மீது, தன்னை அடித்துக் காயப்படுத்தியதாகக் கொடுத்த பிராதின் மீது காரைக்குடி தெற்கு போலீசார் வழக்குத் தொடர்ந்தனர்; வழக்கை விசாரித்த காரைக்குடி சப்-மாஜிஸ்திரேட் எபனேசர், வழக்கு ருசுவாகவில்லை என்று கூறி எதிரியை விடுதலை செய்தார்.

# உணவு உற்பத்தி திட்டங்களுக்கு!

**மத்திய சர்க்கார் ரூ. 23·64-கோடி வழங்கிற்றும்**

புதுடில்லி, செப். 6—

இந்த நடைமுறை ஆண்டில் உணவு உற்பத்திப் பெருக்கத் திட்டத்திற்காகக் கடனாகவும் மானியமாகவும் பலவேறு மாநிலங்களுக்கு ரூ. 23·64 கோடி வரை தரப்பட்டிருப்பதாக உணவு மந்திரி ஏ. பி. ஜெயின் மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

ஆந்திராவிற்கு ரூ. 5·36 கோடியும், சென்னைக்கு ரூ. 3·72 கோடியும் தரப்பட்டதாம். இந்த இரண்டு மாநிலங்களுக்கும்தான் அதிகமான தொகை வழங்கப்பட்டதாக மந்திரி கூறியிருக்கிறார்.

## அனுதாபம்

அரியாகர் தி. மு. கழகத் தோழர் லோகநாதன் அவர்களின் தாயார் 27—8—56 இரவு இயற்கையெய்தியமை குறித்துக் கிளைக் கழகச் சார்பில் அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.


15—9—56 மாலை 6-மணிக்கு

**சென்னை-செயின்ட் மேரிஸ் ஹாலில்**

**அண்ணா**

அவர்கள் தலைமையில்

குறள்நெறி நாடக மன்றம் அளிக்கும்

**'தேவாலயம்'**

[சமூக சீர்திருத்த நாடகம்]

கதை—வசனம்: எஸ். எஸ். தென்னரசு

பாடல்கள்: கவிஞர் சுப்பு ஆறுமுகம், தமிழ்ப்பித்தன்

பயிற்சி: டி. கணேசன் — சங்கீதம்: ஏ. எம். ராஜா — மேற்பார்வை: அ. பொ. அரசு — அமைப்பாளர்: எம். சிவசிங்

★

டிக்கெட் விபரம்: ரூ. 10, 5, 3, 2, 1.

அண்ணா அவர்களிடம், தி.மு. கழகத் தேர்தல் நிதிக்காக மன்றச் சார்பில் நிதி அளிக்கப்படும்


# செங்குன்றத்திற்கு

(ரெட்ஹில்ஸ்—கிராண்டு லயன் கிராமம்)

# அண்ணா

வருகை

★

10—9—56 மாலை 6-மணிக்கு, செங்குன்றம் (ரெட் ஹில்ஸ்) அடுத்த கிராண்டு லயன் கிராம மாரியம்மன் கோயில் மைதானத்தில், வ. உ. சி. மன்ற 4-ம் ஆண்டுவிழா, தோழர் புழல்—துரைசாமி அவர்கள் தலைமையில் நடைபெறும்.

அண்ணா அவர்களும், துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன், தோழர் டி. சண்முகம் எம்.எல்.ஏ., தோழியர் சத்தியவாணிமுத்து ஆகியோரும் சொற்பொழிவாற்றுவர்.

* * *

## நாரவாரிக்குப்பம் ஊராட்சி மன்ற வரவேற்பு

அன்று மாலை 5-மணிக்கு, செங்குன்றம் — நாரவாரிக்குப்பம் ஊராட்சி மன்றச் சார்பில், அண்ணா அவர்களுக்கு வரவேற்பு அளிக்கப்படும்.

# கழகக் கூட்டம்

★

**காவேரிப்பாக்கம்:**

9—9—56 மாலை 6 மணிக்கு பேசுபவர்: எஸ்.எஸ். தென்னரசு

## சென்னை 5-வது வட்ட தி. மு. கழகப் பொது உறுப்பினர் கூட்டம்

10-9-56 மாலை 7 மணியளவில், கழக இல்லில் (2, அனகிரி கிராமணித் தெரு, சென்னை—21), கழகப் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும்; அதுபோது, வரப்போகும் பொதுத் தேர்தலைப் பற்றியும், 'திராவிட நாடு' விடுதலை (பிரிவினை) நாள் விழா கொண்டாடுவது பற்றியும் ஆராயப்படும்.

## கரூர் நகர தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம்

9-9-56 மாலை 4 மணிக்கு கரூர் நகர தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் வெண்ணைமலை ரோடு, முருகேசனார் கட்டிடத்தில் நடைபெறும். அதுபோது, திராவிட நாடு பிரிவினை (விடுதலை) நாள் விழா கொண்டாடுவது குறித்தும், மற்றும் பல பிரச்சினைகள் பற்றியும் ஆராயப்படும்.

## வளவனூர் தி. மு. கழகத் துவக்க விழா

9-9-56 காலை 11 மணிக்கு, தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., அவர்கள் தலைமையில் மேற்படி விழா நடைபெறும். தோழர் மு. வைத்தியலிங்கம் கழகக் கொடியேற்றுவார்.

## சென்னை 27-வது வட்ட அறிவியக்க மன்ற ஆண்டு விழாப் பொதுக்கூட்டம்

10-9-56 மாலை 6-30 மணிக்கு, மேற்படி மன்ற ஆண்டு விழாப் பொதுக்கூட்டம், ஒற்றவாடை கொட்டகை அருகிலுள்ள பிள்ளையார் கோவில் தெருவில், தோழர் வே. அன்புமணி தலைமையில் நடைபெறும்: தோழர்கள் சி. பி. சிற்றரசு, ஆ. ருக்மாங்கதன், ரா. ஆண்டவன், மு. வ. வேலன் ஆகியோர் பேசுவர்.

## கிண்டி-பொறியியல் கல்லூரியில் க. அன்பழகன்

11-9-56 மாலை 5-30 மணிக்கு; கிண்டி-பொறியியற்கல்லூரி தமிழ் மன்றத்தின் சார்பில், 'பாரதி விழா' கொண்டாடப்பெறும், பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் விழாச் சொற்பொழிவாற்றுவார்.


தியாகராயா பைன்ஆர்ட்ஸ் அகெடமி (Regd) வண்ணை-சென்னை

9—9—56 ஞாயிறு மாலை 6-மணிக்கு

**தியாகராயா கலா மண்டபத்தில்**

இலட்சிய நடிகர்

**S. S. இராசேந்திரன்—D. V. நாராயணசாமி**

குழுவினர் அளிக்கும்

**'மணிமகுடம்'**

(மு. கருணாநிதி தீட்டியது)

**100-வது நாடக விழா**

**இரா. நெடுஞ்செழியன்**

அவர்கள் தலைமையில் நடைபெறும்

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், டாக்டர் மு. வரதராசனார், பேராசிரியர் ம. கி. சண்முகம், பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரை, நாரண-துரைக்கண்ணன் முதலியோர் கருத்துரை வழங்குவர்.

**மு. கருணாநிதி,**

**பிரபல திரைப்பட கலைஞர்கள்**

விழாவில் கலந்து கொள்வர்.

கட்டணம்: ரூ. 10, 5, 3, 2, 1; அணா 8.


## சென்னை—சூளை ஊ. பு. அ. சௌந்திரபாண்டியனார் நினைவுப் படிப்பகம்

9-9-56 பிற்பகல் 2-மணிக்கு, மேற்படி படிப்பக புதிய நிர்வாக செயற்குழு அவசரக்கூட்டம் படிப்பகத்தில் (1/26, ஆலத்தூர் சுப்பிரமணிய ஆச்சாரி தெருவில்) தோழர் டி. கே. இளங்கோ தலைமையில் நடைபெறும்; அதுபோது, 'திராவிட நாடு' விடுதலை (பிரிவினை) நாள் விழா கொண்டாடுவதுபற்றியும் மற்றும் பல பிரச்சினைகளும் ஆராயப்படும்.

## பிரச்சாரக் கூட்டம்

9-9-56 மாலை 6-மணியளவில், சென்னை 16-வது வட்ட தி. மு. கழகச் சார்பில், முல்லாசாயபு தெரு சந்திப்பில், தோழர் டி. முத்து தலைமையில் பிரச்சாரக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் ப. து. சம்பத், அரு. பாண்டியன், பத்மநாபன், எஸ். கோபால், ப. ஆசைமுத்து ஆகியோர் பேசுவர்.

அன்று காலையில், கழகப் பணிமனையில், கழகச் செயற்குழு உறுப்பினர் கூட்டம் நடைபெறும்; அதுபோது 'திராவிட நாடு' விடுதலை (பிரிவினை) நாள் விழா கொண்டாடுவது பற்றி முடிவு செய்யப்படும்.

## பாராட்டு விழா

மலாயா பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவராய்ப் பதவி ஏற்றுச் செல்லும் பேராசிரியர் முத்து-இராசாக்கண்ணனார் அவர்களைப் பாராட்ட 9-9-56 மாலை 6 மணிக்கு சென்னை பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளி மண்டபத்தில் (எஸ்பிளனேட்) பாராட்டு விழா நடைபெறும். பேராசிரியர் மயிலை-சிவமுத்து அவர்கள் வரவேற்புரை நிகழ்த்துவார். பண்டிதை எஸ். கிருஷ்ணவேணி அம்மையார், பூ. ஆலாலசுந்தரம் செட்டியார் எம். ஏ., புலவர் அன்பு கணபதி, பகீரதன், க. பெருமாள் எம். ஏ, புலவர் ஆர். சக்ரபாணி, டி. செங்கல்வராயப்பிள்ளை, பி. ஏ., எல். டி., திருமதி இராசமணி அம்மையார், எம். ஏ, பெரும்புலவர் எஸ். எஸ். அருணகிரிநாதர் முதலியோர் பாராட்டுரை வழங்குவர்.

## வாழ்க்கை ஒப்பந்தம்

9-9-56 காலை 7-30 மணியளவில், சென்னை—திருவொற்றியூர், எண்-431, எச்சலூர் சுப்பிரமணிய திருமண மண்டபத்தில் (பஸ் நிலையம் எதிரில்), தோழர் தி. மு. வேணு—தோழியர் நலமங்கை வாழ்க்கை ஒப்பந்தம், தோழர் க. அப்பாதுரை அவர்கள் தலைமையில் நடைபெறும்; தோழர் கே. ஏ. மதியழகன் வாழ்த்துரை வழங்குவார்.

## எழுத்தறிவித்தல்—காதணி விழா

10-9-56 காலை 9 மணியளவில், சென்னை—1, பிடாரியார் கோவில் சந்து, எண்-22 இல்லத்தில் தோழர் வி எஸ் செயராமன் அவர்களின் செல்வன் இரவீந்திரனுக்கு எழுத்தறிவித்தலும், செல்வி கள் மல்லி, கலா இவர்களுக்குக் காதணி விழாவும் நடைபெறும்.

## சென்னைக் கல்விச் சங்கம்

9-9-56 மாலை 5 மணிக்கு, பட்டாளம் ஸ்ட்ரான்ஸ் ரோட், ஆண் பள்ளியில், 'தமிழர் முன்னேற்றம்' என்னும் பொருள் பற்றி திரு. வ. சுப்பிரமணியம் தலைமையில், திரு. தோ. இரா. செயராமன் சொற்பொழிவாற்றுவார்.

## சொற்பயிற்சிக் கூட்டம்

9-9-56 காலை 10 மணிக்கு, சென்னை-மவுண்ட்ரோட், பைராங் ஜங் பகதூர் தெரு, எண்-6 பகுத்தறிவுப் பாசறை பணிமனையில், தோழர் எ. குருமூர்த்தி தலைமையில், 'சுயமரியாதை வரலாறு' எனும் தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

## இலக்கியச் சொற்பொழிவு

சென்னை—இராயபுரம் இலக்கிய மன்றச் சார்பில், மினமரத் தொட்டி, அட்டபாளையம் பசனைக் கோவிலில், 9-9-56 காலை 10 மணிக்கு இலக்கியச் சொற்பொழிவுக் கூட்டம் நடைபெறும். திரு. எஸ். இராசு அவர்கள் தலைமையில், திரு. ம. இளஞ்செழியன் 'நான் கண்ட வள்ளுவர்' என்ற தலைப்பில் விரிவுரையாற்றுவார்.

## இரண்டாம் ஐந்தாண்டு....

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

பொறுத்து நிகழும் என்று நாம் குறிப்பிடுவதற்கில்லை; நான் சூசகமாக அப்படிக் குறிப்பிடுவதாகவும் எவரும் கொள்ளவேண்டாம்; ஆனால் நமது சாமான்கள், இயந்திரங்கள் இங்கு வரமுடியாது போனால் நாம் மீண்டும் திட்டம் பற்றிச் சிந்தித்தாகவேண்டும்—திட்டத்தினைத் திருத்தி அமைத்தாகவேண்டும். எற்படும் சூழ்நிலைக்கு ஒப்ப எல்லா விசேட நடவடிக்கைகளையும் மேற்கொண்டாக வேண்டும்."

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.